நகல்:

தமிழ்நாடு அரசு

சுருக்கம்.

நிர்வாகம் - நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் - அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் - அரசு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அழைக்கப்படும் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது உரிய பயணப்படி - நகராட்சி நிதியில் இருந்து அளித்தல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை,

அரசு ஆணை (நிலை) எண்.498 நாள்: 5.8.89

17.5.89 நாளிட்ட 37735/89/எச்.1 எண்ணிட்ட
ந.நி.இ.கடிதம்.

---

ஆணை:

தமிழ்நாடு நகராட்சி பணியாளர்களின் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் அரசு சார்பில் பேச்சு வார்த்தை அழைக்கப்படும்போதோ, அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர் அழைப்பு அனுப்பி அவர்களின் பணி சம்பந்தப்பட்ட கூட்டங்களில் கலந்துகொள்ளும் போதோ, அந்தந்த சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு பயணப்படி அளிக்கலாமென்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. அரசு, இந்த கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு நகராட்சிப் பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள், அரசின் அழைப்பின் பேரிலோ, அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநரின் அழைப்பின் பேரிலோ கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கான பயணப்படி (தினப்படி உட்பட) தற்போது நடைமுறையிலுள்ள பயணப்படி விதிகளின்படி, அவரவர்கள் பணி புரியும் நகராட்சி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாமென ஆணை இடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. தங்கராசு,
அரசுச் செயலாளர்.

பெறுநர்.

...

நகல்: அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும்.
ஆணைப்படி - அனுப்பப்படுகிறது.

ஒப்பம்...
பிரிவு அலுவலர்.

(உண்மைநகல்)

இகோ/-

---